Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 22 வெள்ளிக்கிழமை (08-10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 314

# கருணாநிதி கூறிய குற்றச்சாட்டு மக்களைக் குழப்பும் கபடத்தனம்

## புலிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைக் கொல்வதற்கு திட்டமிட்டிருப்பதாகவும், அதன் மூலம் திரு. கோபாலசாமியைக் கட்சித் தலைவராக்க முயற்சிப்பதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி எமது இயக்கம்மீது ஓர் அபாண்டமான குற்றச் சாட்டைச் சுமத்தி உள்ளார். இது எமக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஆழ்ந்த வேதனையையும் தருகிறது. கருணாநிதியின் குற்றச்சாட்டு தமிழ் நாட்டு மக்களைக் குழப்பி, திசை திருப்பும் கபட நோக்கம் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு அரசியல் உலகில், நீண்டகாலமாகவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரதான பகடைக்காயாக வைத்து அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெறுவதும், அரசியல் கட்சிகள் தமது சுயநல அரசியல் அபிலாசைகளுக்காகவும், அதிகாரப் போட்டிகளுக்காகவும் புலிகள் இயக்கத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தி வருவதும் சகலரும் அறிந்த விடயமே.

இந்தக் கேலிக்கூத்தான அரசியல் நாடக அரங்கில் கலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் கடற்பரப்பில் 4 மீனவர்கள் உயிரிழப்பு

### மேலும் 4பேர் காயம்; படகுகள் எரிந்து நாசம்

வடமராட்சி, ஒக். 8

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நாகர்கோவில் கடற்பரப்பில் நேற்றுக் காலை 6 மணியளவில் ஸ்ரீலங்கா படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் நான்கு மீனவர்கள் உயிரிழந்தனர். மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை ஏழு படகுகளிலும், பல கட்டுமரங்களிலும் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் ஆழ் கடலில் இருந்து இரு விசைப் படகுகளில் வந்த படையினர் பீரங்கி, ஷெல் தாக்குதல்களையும், வேட்டுக்களையும் தீர்த்தனர்.

படையினர் மீனவர் மீது தாக்குதல் நடத்திய போது விசைப்படகுகளை நோக்கி கரையில் இருந்து எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனை அடுத்து பின்வாங்கிய படையினர் மீண்டும் படகுகளில் வந்து காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லை கடலில் ஒருவர் தலைபிளந்து பலியானார்

வல்வெட்டித்துறை, ஒக் 8

வல்வை ஆதிகோவிலடிப் பகுதி கடலில் — கரையில் இருந்து சுமார் 100 யார் தூரத்தில் — கட்டுமரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூவர் மீது நேற்றுக் காலை 8.15 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் தலை பிளந்த நிலையில் அவ்விடத்திலேயே பலியானார்.

தந்தையும் மகனுமான மற்றைய இருவரும் கடலில் பாய்ந்து உயிர் தப்பிக்கொண்டனர். கட்டுமரம் சேதமடைந்தது.

ஆதிகோவிலடி சிவகுரு வீதி, தியாலை வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சுந்தரம் சுந்தரலிங்கம் (43 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மயிரிழையில் உயிர் தப்பிய சிவகுரு செல்லத்துரை அவரது மகன் செல்லக்கிளி ஆகிய இருவரும், கடலில் பலியானவரையும் கட்டுமரத்தையும் கரைக்குக் கொண்டுவந்து

6 ஆம் பக்கம் பார்க்க

### 1992 - 1993 கல்வி ஆண்டு:

## பல்கலைக்கழக அனுமதிக்கு வெட்டுப்புள்ளிகள் அறிவிப்பு

### விவர அட்டவணை 6 ஆம் பக்கத்தில்

யாழ்ப்பாணம், ஒக், 8

1991 ஆகஸ்ட், 1992 ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் (1992 - 93 ஆம் கல்வி ஆண்டுக்கு) அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தந்தக் கற்கை நெறிகளுக்கான வெட்டுப் புள்ளிகளை மாவட்ட ரீதியில் (25 மாவட்டங்களுக்கும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்டது.

1992 - 93 கல்வி ஆண்டுக்கு அனுமதிப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிக மாணவர்களை சேர்ப்பது என்றும் — [illegible] வெட்டுப் புள்ளிகளைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜெயலலிதா சம்பந்தப்பட்ட

## ஊழல் தஸ்தாவேஜுடன் சென்னாரெட்டி டில்லிக்கு

சென்னை, ஒக். 8

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று புதுடில்லி பயணமானார்.

முதலமைச்சர் ஜெயலலிதா அரசு சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் ஊழல் நடவடிக்கைகள் பற்றிய தஸ்தாவேஜுகளை ஆளுநர் தம்முடன் எடுத்துச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

புதுடில்லியில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரை ஆளுநர் சந்தித்துப் பேசுவார் என்று சென்னையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவைச் சேர்ந்த குடும்பம் தீ மூட்டி எரிப்பு

### ஜேர்மனியில் பயங்கரம்

பேர்லின், ஒக். 8

ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகளுக்கு எதிரான தீவிரவாதக் கும்பல் ஒன்று இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்றை தீ மூட்டி எரித்துள்ளது.

மண்டைதீவைச் சேர்ந்த ராஜாராஜேஸ்வரலிங்கம் என்பவரும் ஜேர்மனியைச் சேர்ந்த அவரது மனைவியும் அவரின் இரண்டு பிள்ளைகளும் கடந்த செவ்வாய் அவர்களது வீட்டில் வைத்து தீ மூட்டிக் கொல்லப்பட்டனர்.

இதுவரை முப்பது வெளிநாட்டு அகதிகள் வரை "மொட்டைத் தலையர்கள்" என்றழைக்கப்படும் தீவிரவாதக் கும்பல்களினால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 13 வயதான இலங்கைத் தமிழ் மாணவி அஜிதா புவனேஸ்வரனும் தீவிரவாதக் கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டார் என்பதும் தெரிந்ததே.

வெளிநாட்டு அகதிகளை ஜேர்மனியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று வலதுசாரி தீவிரவாதக் கும்பல்கள் கோரிவருகின்றன.

(ஓ-எ)

### 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

## சூடாநாட்டு பயணிகள் கிளிநொச்சியில் தவம்

சூடாநாட்டில் பல பகுதிகளையும் சேர்ந்த சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் கிளிநொச்சியில் தவம் கிடக்கின்றனர் என்று தெரியவருகிறது.

படகுச் சேவை மீண்டும் எப்போது நடக்கும் என்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணிகளுக்கு அங்குள்ள தொண்டு நிறுவனங்கள் உதவி வழங்கி வருவதாகத் தெரியவந்தது. (ஓ - 17)

## மட்டக்களப்பில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஒக். 8

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார், அவரிடமிருந்த ஆயுதத்தை புலிகள் கைப்பற்றினர்.

78 ஆம் கிராமத்தில் உள்ள முகாமுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

கொல்லப்பட்ட சிப்பாயிடம் இருந்து ரி 56 - 2 ரகத் துப்பாக்கி ஒன்றையும், மகஸின் மற்றும் நடுத்தர ரவைகள் 30 என்பவற்றையும் புலிகள் கைப்பற்றினர். (ஓ-எ-5-6)

## மாந்தையில் கண்ணி சிப்பாய் பலி; 6 பேர் காயம்

கொழும்பு, ஒக். 8

மன்னார், மாந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவ டிரக் ஒன்று புலிகளின் கண்ணியில் சிக்கியதில் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றும் அறுவர் காயமடைந்தனர்.

பிரிகேடியர் தளில் அமரக்கோன் நேற்று கொழும்பில் இதனைத் தெரிவித்தார்.

(ஓ-எ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளம் நிறைந்த நன்றிகள்

உலக ஆசிரியர் தினத்தில் எம்மைக் கௌரவித்துப் பாராட்டி, வாழ்த்துப்பாமாலை வழங்கி, விருந்து படைத்த சைவப்பிரகாச மாணவர்கள், பெற்றோர்கள், ப. மா. சங்கம், பா. அ. சங்கம் - சபை நலன் விரும்பிகள் ஆகியோருக்கு எமது உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

58/68, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சைவப்பிரகாசம், வேலணை.

(27581)

## "பாராட்டு விழா"

புதிய உயர் கல்லூரியினரால்

யாழ்ப்பாண பிரதேசச் செயலாளரும்,
மேலதிக அரசாங்க அதிபரும்,
தலை சிறந்த எழுத்தாளரும்,
எமது கல்லூரி புவியியல் விரிவுரையாளருமான

### திரு. க. குணராஜா
(செங்கை ஆழியான்)

அவர்கள் கலாநிதிப் பட்டத்தினை பெற்றமையை கௌரவிக்கும் முகமாக பாராட்டுவிழா நடத்தப்படவுள்ளது.

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
காலம்:- 10-10-1993 காலை 11 மணி

குறிப்பு:- சிறப்பு நிகழ்ச்சியாக புதிய உயர் கல்லூரியின் ஆசிரியர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி மாலை 3 மணிக்கு யாழ். O L R. கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

"அனைவரையும் இவ்விழாவில் பங்குபற்ற அன்புடன் அழைக்கின்றோம்"

-விழாக்குழு-

(இ/6180)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தவனம் சின்னத்தம்பி

(முன்னைநாள் பருத்தித்துறைப் போக்குவரத்து சபையின் முகாமையாளர், கட்டட ஒப்பந்தகாரர், சமாதான நீதிபதி (J. P.))

தோற்றம்: 14 - 07 - 1911
மறைவு: 19 - 09 - 1992

திதி: 08 - 10 - 1993

நீங்காத நினைவலைகள்
எம் நெஞ்சில் அலைமோத
அப்பாவே நீர் எம்மை
விட்டேகிச் சென்றீரோ
கண்ணின் மணிபோலக்
காத்திருந்தீர் எமையெல்லாம்
எண்ணிக் கவித்தோமே
எந்நாளும் எமதென்றே
பாசினிலே எமையெல்லாம்
அன்புடனே வளர்த்தெடுத்தீர்
சீருடனே எமையாக்கி
சிறப்புறவே வாழவைத்தீர்
மண்ணில் எமைவிட்டு
மலரடியை நாடினீரோ
நன்றியுடன் நினைத்திருப்போம்
நாளெல்லாம் உமையெண்ணி

உங்கள் நினைவால் வாழும்!

அன்பு மனைவி, ஆருயிர்ச் செல்வங்கள்.
அன்பு மருமக்கள் ஆசைப் பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

"மணிவாசா"
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(6516)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயம் மற்றும் வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றின் தொடக்கநிலை மாணவர்களுக்கான விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1-30 மணி முதல் பெரியபுலம் ம. வி. மைதானத்தில் நடைபெறும்.

பெரியபுலம் ம. வியின் முன்னாள் தொடக்கநிலை பகுதித் தலைவரும், மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அதிபருமான திரு. க. சுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை வழங்குவார். (உ)

o o o

யாழ். மாவட்டத்தில் இன்டறக்ட் கழகம் உள்ள பாடசாலைகளுக்கு இடையில் யாழ் மிட்ரவுண் றோட்டறக்ட் கழகத்தால் நடத்தப்படும் பட்டிமன்றச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## லயன்ஸ் தினம்: இலவச மூக்கு கண்ணாடி

சர்வதேச லயன்ஸ் கழக தினமான இன்று பிற்பகல் 4 மணிக்கு அரியாலை ஆசீர்வாதப்பர் வீதியில் உள்ள காந்தி சனசமூக நிலையத்தில் பொது மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் இடம் பெறும்.

அந்த வைபவத்தில் யாழ். மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் லயன் டாக்டர் சிவபாலன் "சூழல் சுகாதாரம் பேணல் மற்றும் வயிற்றோட்ட நோய் பற்றிய ஆலோசனைகளை வழங்குவார்.

யாழ். லயன்ஸ் கழகமும், அரியாலை காந்தி சனசமூக நிலையத்தினரும் இணைந்து மேற்படி நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்துள்ளனர். (இ-5)

## மகாப்பொல கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 4ஆம் தவணைப்பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 9ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்கான நேர சூசிகை பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

— பதிவாளர்.

(இ-6210)

## அறிவித்தல்

ஆசிரியர் திரு சுரேசன் அவர்களது Physics வகுப்புக்கள் (தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டவை) யாவும் வழமையான நேர அட்டவணைப்படி 09 - 10 - 93 சனிக்கிழமை முதல் யாழ் நகரிலும், நெல்லியடியிலும் நடைபெறும்.

(இ/618)

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றன

இவ்வகுப்புக்களுக்கு விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்க இருப்பவர்களும் ஞாயிற்றுக்கிழமை 10 - 10 - 1993 பதிவாளரை இந் நிலையத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

- பதிவாளர்.

(இ 6211)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு

கலைமாணி பகுதி I B. A. PART I
நேரம்:- 12. 00 — 1. 00
" " பகுதி II " PART II
நேரம்:- 10 00 - 11. 00

அரசியல் விஞ்ஞானம்

விரிவுரையாளர்: திரு. க. செல்வரத்தினம் B.A. (Hons)

ஆரம்பம்: 10 - 10 - 1993

பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6213)

## ஆண்கள் இல்லம்

யுத்தத்தால் குடும்பத்தலைவரை இழந்த குடும்பங்களிலிருந்து கல்விகற்கும் 30 ஆண் பிள்ளைகளை தெரிவு செய்து கல்விகற்பிக்க விருக்கிறோம்.

அனுமதி தேவைப்படுவோர் 20—10—1993 க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

மெதடிஸ்த திருச்சபை புனர்வாழ்வு பகுதி
சி. எல். எஸ். புத்தகசாலை
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(இ/6214)

யாழ்நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும்
யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

இன்று 08 10-1993 வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற விருந்த முக்கிய கலந்துரையாடல் சகலதுறை வர்த்தகர்களினதும், ஊழியர்களினதும் நலன் கருதி நாளை 09 - 10 - 1993 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொள்வதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வர்த்தகர்களும், ஊழியர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கூட்டத்தை சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்,

நன்றி, வணக்கம்.

யாழ். வர்த்தகர்சங்கம்,
21, மேல்மாடி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/6182)

## காணவில்லை

திருமதி சின்னம்மா விஜயரட்ணம்

பிறப்பிடம் :- ஏழாலை வடக்கு.
வசிப்பிடம் :- கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை.

நேற்று (7 10-93) காலை 11 மணியில் இருந்து மேற்குறிய நபரைக் காணவில்லை.

அடையாளம் :- புறப்படும்போது நீல நிறச் சேலை அணிந்திருந்தார். 72 வயது உடையவர். குட்டையான தோற்றம் உடையவர். நரைத்த முடியுடையவர். பிறழ்நிலை (மாறாட்டம்) தன்மை உடையவர்.

விவரம் தெரிந்தோர் :-

திருமதி ஜெயந்தினி மித்திரறஞ்சன்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

என்ற முகவரிக்கு அறிவித்தரவும்.

தகவல்
திரு. வி. மித்திரறஞ்சன் (மகன்)

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

(27584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,500 விவசாயிகளுக்கு குடாநாட்டில் கடன் திட்டம்

## விவசாய இணைப்புக்குழு வழங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 8

அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் விவசாய இணைப்புக்குழு, குடாநாட்டிக் உள்ள 10 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

யூ. எஸ். விவசாயத் திட்டத்தை மேற்பார்வை செய்த அரசசார்பற்ற நிறுவனங்களான அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், ஊற்று நிறுவனம், மக்கள் நலன்காக்கும் பிரிவு, அறவழிப் போராட்டக்குழு, உலர்வலய அபிவிருத்தி நிறுவம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள விவசாய இணைப்புக்குழுவே இக் கடனை வழங்கவிருக்கிறது.

விவசாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய தன்னேவிக் விவசாயிகளிடம் இருந்து பெற்ற நிதியில் இருந்து 8 ஆயிரத்து 250 நெற் செய்கை விவசாயிகளுக்கும், 2 ஆயிரத்து 283 சிறுபயிர்ச் செய்கையாளர்களுக்கும் இக் கடன் வழங்கப்படும்.

இந்த விவசாயத் திட்டத்துக்காக— விவசாயிகளுக்கு வழங்கவென— 940 மெற்றிக் தொன் உரம் மற்றும் விதை நெல், மரக்கறிவிதை ஆகியவற்றை மேற்படி குழு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வந்துள்ளது.

தற்சமயம் விவசாயிகளைத் தெரிவுசெய்யும் வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-8)

## செல்வபுரம் பகுதியில் தொழு நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 8

உரும்பராய் செல்வபுரம் பகுதியில் இரண்டு தொழு நோயாளர் இனங்காணப்பட்டுள்ளனர்.

சென்ற மாதம் 25 ஆம் திகதி இப்பகுதியில் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொழுநோய் ஆய்வின் போது நோயாளர்கள் இனங் காணப்பட்டனர்.

வடபிராந்திய தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. கு. குணரத்தினம் சேப்பாயி பகுதி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார ஊழியர்கள் இப்பகுதியில் மேற்படி ஆய்வில் ஈடுபட்டனர்

(இ-162)

## சுயதொழில் கடன் திட்டம் மேலும் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஒக். 8

இலங்கை வங்கி கிளைகள் ஊடாக வழங்கப்படவிருந்த சுயதொழில் முயற்சி கடன் மேலும் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பலனாக இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாக 10 ஆயிரம் ரூபாவை சுய தொழில் முயற்சிக் கடனாக வழங்க இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்தக் கடனை வழங்குவதற்கான சுற்று நிருபம் கொழும்பு தலைமையகத்தில் இருந்து இது வரை கிடைக்கவில்லை என்றும்—

சுற்று நிருபம் கிடைத்ததும், கடன் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும்— இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் திரு எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

(ஒ 8)

## சைவ சித்தாந்த வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் சைவ சித்தாந்த ஆய்வுவட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சைவ சித்தாந்த வகுப்புக்களை நடத்தவுள்ளது.

க. பொ. த. உயர்தர மாணவர்கள் உட்பட ஏனைய ஆர்வம் மிக்கவர்களும் இந்த வகுப்புகளில் கலந்துகொள்ள முடியும். மேற்படி வகுப்புகளில் கலந்துகொண்டு பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை திருமறைக் கலாமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு மன்றப் பொதுச் செயலாளர் திரு யூ. கெல்கிரன் ரைன் கேட்டுள்ளார்.

(ஒ-111)

## வன்னியில் பனம்பொருள் உற்பத்தி நிலையங்கள்

### ஏற்றுமதிச் சந்தைக்கு வாய்ப்பு

பனை அபிவிருத்திச்சபை தனது செயற்பாடுகளை வன்னிமாவட்டத்தில் தீவிரப்படுத்தி வருகின்றது.

இப்பகுதியில் இதுவரை காலமும் செயற்படாமல் இருந்த பிராந்திய காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது.

ஓரளவு ஊழியர்களுடன் தற்போது யாழ். வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் அது இயங்கி வருகின்றது.

இப்பிராந்தியக் காரியாலயம் வன்னி மாவட்டத்தின் மன்னார் நகரப்பகுதி நீங்கலாக ஏனைய கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு கேந்திரஸ்தானமாக அமையவுள்ளது.

பனம் பொருள் உற்பத்தி நிலையங்கள் இராமநாதபுரம் வட்டக்கச்சி, கல்விளான் ஆகிய இடங்களில் விரைவில் இயங்கவுள்ளன.

இந் நிலையங்கள் சுய வேலைவாய்ப்பு, ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்தி என்ற அடிப்படையில் இயங்க உள்ளன.

(இ-162)

## இந்து மகளிர் பழைய மாணவிகள்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளை ஏற்பாடு செய்த மதிய போசன விருந்து கொள்ளுப்பிட்டி வெஜிலண்டின் ஹோட்டலில் கடந்த மாதம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் கல்லூரி நூலகத்திற்கென ஒரு தொகுதி நூல்களை சங்கத்தின் பொருளாளர் திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன் சங்கம்சார்பில் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதிநாதனிடம் கையளித்தார்.

(ச)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 8

தொப்பிகல காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சுற்றிவளைத்த சமயம் அங்கு இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரவேங்கை ஹரிகரன் (சிவலிங்கம் ஹேமச்சந்திரன் -மண்முடித் தீவு கொக்கட்டிச் சோலை), ஜீவமுரளி அல்லது கலைராஜ், (சிவலிங்கம் சுரேஸ்குமார் - 6 ஆம் கட்டை, உன்னிச்சை) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர், கடந்த மாதம் 19 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

திருமலை மாவட்டத்தின் விளக்கந்தை வன்னாய் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முழுநேர ஆதரவாளர் இருவர் வீரச்சாவடைந்தனர்.

மூதூரைச் சேர்ந்த ராஜா (ராசதுரை அற்புதராஜா), குஞ்சு என்று அழைக்கப்படும் இராசரட்ணம் ஸ்ரீகந்தராஜா ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

(உ-5)

## மீண்டும் கொலரா

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாந்திபேதி (கொலரா) பரவும் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளது.

சில நாட்களாகக் குறைந்திருந்த நோய் பரவும் வேகம் கடந்த மூன்று நாட்களாக முந்திய நிலைக்கு மீண்டும் திரும்பி உள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த மூன்று நாட்களில் மொத்தம் 25 பேர் யாழ் ஆஸ்

… 10

பேர் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாவர்.

(அ-15)

## ரஷ்ய அரசியல் குழப்பம்; நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

மொஸ்கோ, ஒக். 8

ரஷ்யாவில் எழுந்துள்ள அரசியல் குழப்பத்தின் விளைவாக இடம்பெற்ற சண்டைகளில் இந்த வாரம் இறந்தவர்கள் நினைவாக நேற்றுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி யெல்ட்சினுக்கு எதிராக ரஷ்யாவில் கிளர்ச்சிகள் இடம்பெற்று வருவதும்— கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களை யெல்ட்சின் படைபலத்தை பிரயோகித்து நசுக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் இதுவரை 150க்கும் மேலானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி யெல்ட்சின் நாட்டுக்கு விடுத்த செய்தி ஒன்றில் தம்மை ஆயுதம் கொண்டு எதிர்த்தவர்கள் அனைவருக்கும் மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற கிளர்ச்சிக்காரருக்கு ஆதரவாக இருந்த பிராந்திய சபைகள் அனைத்தும் கலைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் டிசம்பரில் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ச)

## கடல் தொழிலாளருக்கு நிவாரணம் வழங்குக

### அரச அதிபரிடம் கோரிக்கை

வலி. தெற்கு, மேற்கு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புகளினதும் கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியம் உள்ளூர் கிராமப்புற கடல் தொழிலாளருக்கு வறுமை நிவாரணம் வழங்கும்படி கோரும் மகஜர் ஒன்றை சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ளது.

நவாலி, சாவற்கட்டு, மாவிட்டபுரம் ஆகிய இடங்களிலுள்ள மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைப்பது அரிது எனவும் சிறுகடல் தொழில் வருமானத்தை நம்பி வாழும் மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடுகிறார்கள் எனவும் ஒன்றியம் அதன் மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

(ச)

## கொழும்பு பாணி கைதுகள் தற்போது வவுனியாவிலும்

யாழ்ப்பாணம், ஒக். 8

கொழும்பு பாணியில் வவுனியாவிலும் தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு செல்லும் நோக்குடன் வவுனியா செல்லும் தமிழ் இளைஞர்கள் படையினரிடம் பதிவு செய்து அடையாள அட்டை பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்தில் இரவில் படையினர் விசாரித்து, அந்த இளைஞர்களைக் கைது செய்யப்படுவதாகவும் —

வவுனியாவில் நிரந்தரமாக தங்கும் இளைஞர்களும் அடிக்கடி சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-3)

## யாழ்தேவி நடவடிக்கையை முறையாக நடத்தவில்லை

### நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 8

கடந்த வாரம் பாதுகாப்புப் படையினர் வடக்கே 18 கிலோ மீற்றர் தூரம் முன்னேறியதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் பழைய இடத்துக்குத் திரும்பி விட்டனர். இது யுத்தத்தை நீங்கள் முறையாக முன்கொண்டு செல்லவில்லை என்பதையே காட்டுகிறது. இதனால் வீண் உயிரிழப்புகளே ஏற்பட்டன.

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மங்கல குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

(இ)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி

குணநாதன் நிஸாந்தி

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த ஆசிரியர் குணநாதன்- பங்கஜவல்லி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிஸாந்தி தனது முதலாவது பிறந்த நாளை இன்று 08-10-1993 தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணன் நிரோஷன், அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

08 - 10 - 1993 (6580)



யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

சகல அங்கத்தவர்களின் கவனத்திற்கும்

30 - 09 - 1993 இல் முடப்பட்ட வாக்காளர் இடாப்பு பின்வரும் இடங்களில் 15 - 10 - 1993 தொடக்கம் 24 - 10 - 1993 வரை காட்சிக்கு வைக்கப்படும்.

சித்தன்கேணி கிளை — சுளிபுரம் நெசவு நிலையம்.
சுன்னாகம் கிளை — சங்க சுன்னாகம் புடவை விற்பனை நிலையம், பஸ்ஸ்ராண்ட் முன்பாக
வேலணை கிளை — தலைமைக் காரியாலயம், கோண்டாவில்.
சாவகச்சேரி கிளை — மறவன்புலவு நெசவு நிலையம்.
நெல்லியடி கிளை — மாலிசந்தி நெசவு நிலையம்.
யாழ்ப்பாணம் கிளை — தலைமைக் காரியாலயம், கோண்டாவில்.

இது தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 03 - 11 - 1993 க்கு முன் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் செயலாளர், யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

- செயலாளர்.

07 - 10 - 1993 (இ 6209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1 அங். உருளை மென் உருக்குக் கம்பி 22 அடி, 1½ அங். உருளை மென் உருக்குக் கம்பி 23 அடி, 7/8 அங். ஜம்பர் 4½ அடி, 1½ அங். ஜம்பர் 4½ அடி. நல்ல நிலையிலுள்ள ஹம்பர் சைக்கிள் ஆகியன விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பளை வீதி, சித்தன் கேணி. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அருகில். (27576)

நல்ல இன பசுக்களும் பசுக் கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ரெஜினா கபே, இல. 720, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (27501)

### திருமண சேவை

எம்மிடம் சகல தரத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். உடன் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும். புதன், சனி, ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்புகொள்ளவும்: ம. ஸ்ரீபதி, அனுமதி பெற்ற விவாகப் பொருத்துனர், விக்கி னேஸ்வரா ஒழுங்கை, இணுவில் தெற்கு, இணுவில். (6521)

### இலவச திருமண சேவை

29 வயது, மூலம், செவ்வாய் 7, பாவம் 49, U.K இல் படிக்கும் மணப்பெண்ணுக்கு மணமகன் U.K இல் தேவை. சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில்: த. விமலா, இலவச திருமண சேவை, யாழ்: நாச்சிமார் கோவிலடி. (27536)

### ஆண்டு - 6 அனுமதி

ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை 10-10-93 ஞாயிறு முற்பகல் 11-00 இற்கு நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27553)

### உடன் விற்பனைக்கு

பொமரேனியன் கறுப்பும், பிறவுணும், பெண் இரண்டு வயது, அல்சேஷன் ஆண் ஆறு மாதம். இராமலிங்கம், இல. 199, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (27574)

### ஆண்டு 4 - பரீட்சை

1994 ஆகஸ்ட் புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் தொடர் பரீட்சையின் 12ஆவது பரீட்சை 9-10-93 சனிக்கிழமை நடைபெறும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27575)

**NEW SCIENCE ACADEMY**

எழிலகம் முன்பாக, யாழ்நகர்.

**O/L SCIENCE**

**PAPER CLASS**

By:
T. THAVACHELVAN
Sat & Sun 1-30 P. m.

(இ-6208)

### நூல் விற்பனை

ஆலய வழிபாடும், தத்துவமும் — உயர்வகுப்பு மாணவர்களுக்கும், பக்தர்களுக்கும் முக்கியமான நூல் சிவஸ்ரீ தி. சோமஸ்கந்தராஜக் குருக்கள் B. A. ஆசிரியரால் ஆக்கப்பட்டது. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மகிமை புத்தகசாலை, மன்டேலா புத்தகசாலை, இ. கோல் டிஸ்ரிபியூட்டர், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், திருக்கணித நிலையம், சாவகச்சேரி. (27567)

# A/L 95

வர்த்தகம்
தேவா

புதிய பிரிவு

ஆரம்பம்:
**09-10-1993**
(3 மணி)

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(இ-6169)

## கல்விக் கண்காட்சி
### சமூகக்கல்வியும் வரலாறும்

இடம்: சண்டிக்குளி மகளிர் கல்லூரி
நேரம்: காலை 9.00 – பிற்பகல் 4.00 மணி வரை

ஆண்டு 6 — 11 வரை மாணவிகளால் ஒழுங்கு படுத்தப்படும் இக் கண்காட்சி

08 — 10 — 1993 வெள்ளி
(சகல பாடசாலை மாணவர்களுக்கும்)

09 — 10 — 1993 சனி
(பெரியோர்களுக்கு மட்டும்)

கட்டணம்: ரூபா 2 மட்டும்

— அதிபர்.

(இ-6207)


## ஸ்கூட்டர் - காணவில்லை

கடந்த வருடம் கொம்படியில் தேநீர் கடையொன்றில் பாதுகாப்பிற்கு நிறுத்தி வைக்கப்பட்ட வெள்ளை நிற 6ஸ்ரீ 741 இலக்க லம்பிரட்டா ஸ்கூட்டரைக் காணவில்லை. ஸ்கூட்டர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும்.

★ தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

D. ரூபன்
9ஆம் குறுக்குத் தெரு,
மணியந்தோட்டம், கொழும்புத்துறை.
(27580)

## REMEMBRANCE OF
## ROHAN GAJANANDAN THAMBIAHPILLAI
ON HIS
### Twenty First B' Day



Fallen tears and heartaches,
Are things we have to bear,
Losing you the way we did
Always seems unfair
A B'day card we cannot send
But Flowers grow in heaven Lord,
Pick a bunch for us,
Give it to our precious Rohan
Along with a kiss from us.

Affectionately remembered By:
Dada, Amma, Brothers and Sister.

151, Hospital Road,
Jaffna. (27564)


## அரச அதிபருக்கு மகஜர்

கொழும்புத்துறை, ஒக். 8

சமீபத்தில் தென்மராட்சியிலும் மற்றும் கொக்குவில், கோண்டாவில் பகுதிகளிலும் ஸ்ரீலங்கா படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப சம்மேளனம் இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளது.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| செல்லர் டேவிட் | டேவிட் அன்னம்மா |
|---|---|
| பிறப்பு: 31-07-1920 | பிறப்பு: 09-03-1920 |
| இறப்பு: 10-10-1983 | இறப்பு: 06-01-1984 |

பார்த்திருக்கப் பத்தாண்டு பறந்ததையா!
எம் நெஞ்சினிலோ உம்நினைவு அகலவில்லையே!
பெருமரமாய் நிழல் தந்து எமைக்காத்த தந்தையே!
இனியவராய் நீர் இருந்து கேட்டதெல்லாம் தந்தீர்களே!
எதை உமக்கு நாம் தருவோம்,
எம் கண்ணீர் அஞ்சலிதான்!

நாளை 09-10-93 காலை 6-30 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

— பிள்ளைகள்.

இல. 35/1,
இராஜேந்திர வீதி,
யாழ்ப்பாணம். (27577)

# 31ஆம் நாள்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



**தம்பு மகாதேவன் (B. Sc)**
(முன்னாள் இ. போ. ச. பிரதேச கணக்கியல் முகாமையாளர்)
நீர்வேலி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 — 09 — 1950 | 08 — 09 — 1993 |

கடந்த 08 - 09 - 1993 இல் கனடாவில் இறைபதம் அடைந்த எமது அன்புச் சகோதரர் மகாதேவனுடைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக் கிரியைகளும் 08 - 10 - 1993 வெள்ளிக்கிழமை பகல் 11-30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்களும், நண்பர்களும் இவ்வைபவத்தில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர், சகோதரியர்.

தகவல்:
தம்பு பத்மநாதன்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (27578)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## நன்றே நடந்தது

ஒக்டோபர் ஆறாம் திகதியான நேற்று முன்தினம், கடந்த புதன்கிழமை, தமிழீழப் பகுதிகளில் உலக ஆசிரியர் தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய சொத்துகளில் அரியது கல்வி. அந்தக் கல்வியை ஊட்டும் குருவை இறைவனாகப் போற்றுவது தமிழர் மரபு. குரு!— சிஷ்ய உறவும், மதிப்பும், கௌரவமும் தமிழர் வாழ்வோடு இணைந்திருந்தவை.

ஆனால் புதிய கல்வி முறையினாலும், கல்வி போதனை முறையாலும் ஆசிரியர்களை மதித்துப் போற்றும் மரபு தமிழர் மத்தியிலும் குன்றிவிட்டது. உலக ஆசிரியர் தினம் அந்த பண்பினை மீண்டும் ஊக்குவிக்கும் ஏதுவாக அமையும்.

விசேடமாக இன்றைய சூழ்நிலையில், தமிழ் மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கு நிமிடம் தோறும் நன்றிகூறி அவர்களை மதித்துப் போற்ற வேண்டும். தமிழர்களின் கல்வி வளர்ச்சியை சீர்குலைத்தால் அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்துவிடலாம் என்ற நோக்குடன் அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

பாடசாலைகள் குண்டு வீசியும், எறிகணை ஏவியும் சேதமாக்கப்படுகின்றன. பாடநூல்கள், எழுது கருவிகள், ஆய்வு கூட உபகரணங்கள் போதிய அளவில், உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. வீட்டில் கல்வி பயில மண்ணெண்ணெய் தானும் கிடைப்பதில்லை. இவை யாவும் தமிழர்களின் கல்வி வளர்ச்சியை கெடுப்பதற்கான சூழ்ச்சியின் ஒரு சில நடைமுறைகள்.

இத்தனை இடர்களுக்கும், குறைபாடுகளுக்கும் மத்தியில், தமிழர் கல்விக்கு எதிரான அரசின் போரை எதிர்கொண்டு தமிழ் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். தேசியப் பற்றுடனும், பொறுப்புணர்வுடனும் தமது மாணவர்களுக்கு கல்வி அறிவைப் புகட்டுகிறார்கள். அரசாங்கத்துக்கு சவால் விடுவது போலத் தமது கல்விப் பணியை ஆற்றுகிறார்கள்.

இதற்காக தமிழ் மாணவர்கள் தமது ஆசிரியர்களைத் தெய்வமாக மதித்து ஏற்றிப் போற்றுவது அவர்களின் தலையாய கடமை என்று வலியுறுத்த விரும்புகிறோம். ஏன்? அரசின் நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்கத் துணிவின்றி தமிழ் ஆசிரியர்கள் சோர்ந்து போயிருப்பின் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை சீரழிந்திருக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டே, தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன், தமது ஆசிரியர் தினச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு நிற்கும் தேசியப் பணியில் எமது ஆசிரியர்கள் கடமை உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும், தேசியப் பற்றுணர்வுடனும், துணிவுடனும் செயலாற்றி வருவது கண்டு நான் பெருமை கொள்கிறேன். இந்நிலையில் எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படியாக இருக்கும் இப்பெருந்தகைகளை ஏற்றிப் போற்றி மதிப்பளிப்பது எமது கடமையாகும்" — என்று எடுத்துரைத்துள்ளார்.

எல்லா வகைகளாலும் தமிழ் ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். மாணவர்கள் மட்டுமன்றி முழுச் சமூகமே அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். புதனன்று அது நன்றே நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும். அன்றைய நிகழ்வுகளுக்குப் பின்னால் நின்ற தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பணியும் மெச்சத்தக்கது.

# நீந்திக்கொண்டிருந்தவர் மீது படையினர் படகைசெலுத்தினர்

## 'புரொப்ளர்' தலையை துண்டித்தது

கடற்படையினர் எம்மீது நடத்திய தாக்குதலை அடுத்து நானும் என்னுடன் கூட வந்த ஆசீர்வாதம் டொன் பொஸ்கோ என்பவரும் கடலில் பாய்ந்து நீந்தி வந்து கொண்டிருந்தோம். அப்போது கடற்படையினர் நீந்திக் கொண்டிருந்த எம்மீது தமது படகைச் செலுத்தினர். கடற்படைப் படகின் 'புரொப்ளர்' ஆசீர்வாதம் டொன் பொஸ்கோவின் கழுத்தைத் துண்டித்தது, அவரது தலையற்ற உடல் தண்ணீரில் மிதப்பதைக் கண்டேன்.

நேற்று வடமராட்சி பகுதியின் மணற்காடு — நாகர்கோவில் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலின் போது சிறு காயத்துடன் நீந்திக் கரை சேர்ந்த அல்போன்ஸ் ஜெயக்குமார் (வசந்தன்) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்டைக் காட்டிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை முனைப்பகுதியில் வசிக்கும் அல்போன்ஸ் ஜெயக்குமார் சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது:—

பருத்தித்துறை — முனைப் பகுதியில் இருந்து நேற்று காலை ஏழு பிளாஸ்டிக் படகுகளில் 21 பேர் சென்று கொண்டிருந்தோம். முதல் நாள் மீனுக்காக வலைகளை கடலில் விரித்திருந்தோம். அகப்பட்ட மீனைப் பிடிப்பதற்காகவே நேற்றுக் காலை சென்று கொண்டிருந்தோம்.

எமது படகு ஒவ்வொன்றிலும் இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

நாங்கள் நாகர் கோவில் கடற்பரப்பை அடைந்து கொண்டிருந்த போது வெற்றிலைக்கேணிப் பக்கமாக இருந்து இரண்டு பீரங்கிப் படகுகள் வந்து கொண்டிருந்தன. பீரங்கிப் படகுகள் எமது படகுகளை நோக்கி வருவதைக் கண்டவுடன் வலைகளை விட்டுவிட்டு, திரும்பி கரைக்கு வருவதற்கு முயற்சித்தோம். ஆனால் அதற்குமுன் கடற்படையினர் எமது படகுகளை வழி மறித்துத் தாக்கத் தொடங்கினர்.

எனது படகில் இருந்த ஆசீர்வாதம் டொன் பொஸ்கோவும் நானும் கடலில் பாய்ந்து நீந்தி வரும் போதே ஆசீர்வாதம் டொன் பொஸ்கோ மீது கடற்படையினர் தமது படகை செலுத்தி அவரது தலையைத் துண்டித்தனர்.

இச் சம்பவத்தில் எம்மவருடைய 210 வலைகளும் நான்கு படகுகளும் எட்டு படகு இயந்திரங்களும் படையினரால் சேதமாக்கப்பட்டு விட்டன.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-9-173-109)

# கோமாரி - குமண சேவைகள் மாதஇறுதியில்இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக் 8

"கோமாரி", "குமண" ஆகிய இரு கப்பல்களினதும் சேவை இம்மாத இறுதியுடன் இடை நிறுத்தப்படவிருப்பதாக யாழ். அரச அதிபருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் மேற்படி இரு கப்பல்களின் சேவையை மழைக்காலம் முடியும்வரை இடைநிறுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் மூன்று மாத காலமும் மழைக்காலமாக இருப்பதால் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை கப்பல்களில் இருந்து இறக்கும் பணி பாதிப்படையலாம் என்றும் அதனாலேயே கப்பல் சேவை மட்டுப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி வரும் 'கோமாரி' கப்பல் கொழும்பு திரும்பியதும் அதன் சேவை இடைநிறுத்தப்படும் என்றும் —

கொழும்பில் இருந்து ஒரு தொகுதி உணவுப் பொருள்களுடன் இம்மாத இறுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'குமண' கப்பல் பொருள்களை இறக்கிவிட்டு கொழும்பு திரும்பியதும் அதன் சேவையும் இடைநிறுத்தப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி காலப் பகுதியில் வடபகுதிக்கான சேவையில் "லாதுல" கப்பல் மட்டுமே ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் சேவைகள் இடைநிறுத்தப்படுவதால் அரச ஊழியர்கள் இங்கிருந்து செல்வதற்கும் கொழும்பில் இருந்து கப்பல் மூலமும் விமான மூலமும் பலாலிக்கு வரும் அரச ஊழியர் பருத்தித்துறைக்கு வந்து சேர்வதற்கும் இணைப்பு கப்பல் வசதி இல்லாமற்போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## பண்டத்தரிப்பு கோட்ட ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம்' ஒக். 8

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளி காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (இ)

## தொழில்நுட்பக் கல்லூரி: ரூ. 2,500 புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், சம்மாந்துறை, அம்பாறை, கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 18 தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கான புலமைப் பரிசில் 500 ரூபாவில் இருந்து 2, 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இது எதிர்வரும் ஜனவரி முதல் அமுலுக்கு வரும்.

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை செல்வன் சிவஞானம் பாலமுரளி, செல்வி சிவஞானம் சுகந்தி ஆகியோரின் மெல்லிசை இடம் பெறும். (ச)

o o o

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகையான "அரங்கம்" கையெழுத்துப் பிரதி சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (ச-173)

o o o

வேலணைக் கல்விக்கோட்ட கல்வி அதிகாரி அமரர் சு. சண்முகநாதன் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் (சென் ஜோன்ஸ் அக்கடமி) நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகப் புவியியற்துறைப் பேராசிரியர் திரு. செ. பாலச்சந்திரன் "இன்றைய வானிலை நிகழ்வு" எனும் விடயம் பற்றிப் பேருரை நிகழ்த்துவார்.

## தபால்களை சேர்ப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக் 8

குடா நாட்டில் சேகரிக்கப்படும் வெளியூர் தபால்களை 'கோமாரி, கப்பல் மூலம் அனுப்புவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதற்கு வசதியாகப் பொது மக்கள் நாளை சனி முற்பகல் 9 மணிக்கு முன்பாக யாழ் பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் கடிதங்களைச் சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (இ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

"உதயன்" நிறுவனத்தின் ஆதரவில் அரியாலை திருமகள் சனசமூக நிலையம் ஒழுங்கு செய்து நடத்திவரும் வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய வி. க. "ஏ" அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய வி. க. "பி" அணி மோதும்.

இந்தச் சுற்றுப் போட்டியில் மொத்தம் ஒன்பது அணிகள் பங்குபற்றின.

o o o

அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக கழக மைதானத்தில் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

* காலை 8-30 மணி:- ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி.

* பிற்பகல் 1 மணி:- ஷப்றா விளையாட்டுக் கழக அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய "ஏ" அணி. (உ)

o o o

யாழ்மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் வடமராட்சிக் கோட்டத்துக்கான சதுரங்கச் சுற்றுப்போட்டி இன்று காலை 8. 30 மணி முதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இப்போட்டிகள் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

## பெனாஸீர் பூட்டோவின் கட்சி முன்னணியில்

பாகிஸ்தானில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி முன்னணியில் இருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

இதுவரை முடிவடைந்த வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் பாகிஸ்தான் மக்கள் கட்சி 86 இடங்களையும், பெனாஸீரின் முக்கிய அரசியல் எதிரியான நவாப் ஷெரீபின் கட்சி 76 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. 43 இடங்களை எதிர் கட்சிகளும் சுயேச்சை உறுப்பினர்களும் பெற்றுள்ளனர். (இ - 5)

## அச்சுவேலி தெற்கில்

# வீடுகளை விட்டுச் சென்றோர் சிறிது நேரத்தில் திரும்பினர்

அச்சுவேலிப் பகுதியில் உள்ள செல்வநாயகபுரம்— ஒட்டகப்புலம் வெளியில் நேற்றுக் காலை கவச வாகனங்கள் காணப்பட்டன.

காலை 7 மணியளவில் அவற்றைக் கண்ட அச்சுநகர், தோப்பு, கொலனி நவக்கிரி, இராச வீதிப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுச் சென்றனர்.

படையினர் கவச வாகனங்களில் தெற்கு நோக்கி வருவதற்கு முயற்சித்தார்கள் எனினும் விடுதலைப் புலிகள் ஆரம்பத்திலே நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டனர்.

இருப்பிடங்களை விட்டுச் சென்ற மக்கள் சில மணி நேரத்தின் பின்னர் தமது வீடுகளுக்குத் திரும்பினர். (அ-11)

## சுதந்திரப் பறவைகள்

விடுதலை புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப்பறவைகள்" இதழ் நாளை சனிக்கிழமை வெளிவருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலில் களப்பலியான பெண் புலி 2 ஆம் லெப். மாலதியின் சிறப்பிதழாக அமையும் ஐப்பசிமாத இதழில் —

பூநகரி தவளைச் சமரில் மகளிர் படையணி இராணுவத்தினருக்கு ஏற்படுத்திய இழப்புகள் குறித்த செய்தியும், படங்களும் வெளியாகி உள்ளன. (அ)

**குளம் இல்லா ஊருக்கு பசுமை இல்லை**
**நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப் புள்ளி விவர அட்டவணை

| கற்கை நெறிகள் | கொழும்பு | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா | திருமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வைத்தியம் | 266 | 261 | 218 | 222 | 197 | — | 227 | 232 | 241 | 249 |
| பல் வைத்தியம் | 262 | 260 | 202 | 216 | 195 | 227 | 226 | 227 | 236 | 248 |
| மிருக வைத்தியம் | 259 | 259 | — | 212 | 191 | 187 | 224 | 221 | 235 | 246 |
| விவசாயம் | 249 | 249 | 210 | 194 | 189 | 195 | 208 | 212 | 229 | 238 |
| உயிரியல் விஞ்ஞானம் | 241 | 236 | 196 | 181 | 182 | — | 199 | 202 | 210 | 224 |
| பொறியியல் I | 290 | 284 | 215 | 250 | 210 | 232 | 255 | 242 | 246 | 262 |
| பொறியியல் II | 280 | 276 | 213 | 181 | 201 | — | 230 | 233 | 242 | 259 |
| பௌதிக விஞ்ஞானம் | 251 | 247 | 197 | — | — | — | 186 | 184 | 182 | 198 |
| முகாமைத்துவக் கல்வி | 291 | 286 | 268 | 254 | 244 | 256 | 266 | 270 | 163 | 276 |
| வர்த்தகம் | 276 | 273 | 255 | 243 | 238 | 252 | 257 | 255 | 254 | 261 |
| சட்டத்துறை | 281 | 272 | 232 | 234 | 214 | 250 | 267 | 255 | 265 | 280 |
| கலைத்துறை | 243 | 248 | 239 | 239 | 245 | 214 | 239 | 246 | 243 | 249 |

### பல்கலைக்கழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைப்பது என்றும் —

கடந்த வெள்ளிக்கிழமை உயர்கல்வி அமைச்சர் திரு. திஸ்ஸ அத்தநாயக்கா தலைமையில் நடைபெற்ற துணைவேந்தர்கள் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த முடிவுக்கு இணங்கவே புதிய வெட்டுப் புள்ளிகளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று முன்தினம் வெளியிட்டது.

கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளிகளின் விபரம் கொண்ட அட்டவணையை அருகே பார்க்கவும்.

இதேவேளை —

1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களில் 180 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (அனுமதி) விண்ணப்பிக்குமாறும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்டிருக்கிறது.

(ஆ-க)

### வல்வை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்தனர்.

கடற்படையினரின் கலிபர் தாக்குதலைத் தொடர்ந்து மீனவர்கள் பலரும் வலைகள், மீன்பிடி உபகரணங்களைக் கைவிட்ட நிலையில் கரை சேர்ந்தனர்.

மீனவர்களின் படகுகளும், றோலர்களும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-155-173 109-9)

### ஊழல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை — தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாக உளவுத்துறை நிறுவனங்கள் மத்திய அரசுக்கு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

### உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம். ஒக். 5

அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காய உற்பத்தி இம்முறை வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அராலி கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பம்பாய் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டதாயினும் விவசாயிகளுக்கு பெருமளவு உற்பத்தினை அது சம்பாதிக் கொடுக்கவில்லை.

(த-17)

### நாகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் தாக்குதலின்போது மீனவர்கள் பலர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தனர்.

படகுகள் தீப்பிடித்து எரிந்தன. மூன்று படகுகள் கடலில் மூழ்கின.

காயமடைந்த மீனவர்கள் கரைப்பக்கமாக நீந்தித் தப்ப முயன்றவேளை, படையினர் அவர்கள் மீது விசைப்படகுகளைச் செலுத்தி கொன்றும் உள்ளனர். படகுகளின் புறொப்லர் வெட்டியதால், கழுத்து துண்டிக்கப்பட்டும் மீனவர்கள் பலியாகினர்.

நேற்றைய மேற்படி தாக்குதல்களால் நாகர் கோவில் பகுதியில் மட்டும் நால்வர் உயிரிழந்தனர். பலியானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது.

உயிரிழந்தவர்கள் நால்வர் விவரம் வருமாறு:- வலித்தூண்டலில் இருந்து இடம் பெயர்ந்து முனையில் வசித்து வந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் (22 வயது), 2 ஆம் குறுக்குத் தெரு முனையைச் சேர்ந்த தம்பராசா உதயராசா (35 வயது), தவம் அல்லது ரவி (30 வயது), முனையைச் சேர்ந்த ஆசீர்வாதம் டொன் பொஸ்கோ 23 வயது) (இவரது கழுத்து புறொப்பர் நெரித்து துண்டிக்கப்பட்டு விட்டது)

காயமடைந்தவர்கள் வருமாறு:-

வியாகுலசாமி (50 வயது) பருத்தித்துறை, பாலசுந்தரம் (39 வயது) நாகர்கோவில், தேவராஜா (28 வயது) சபாரத்தினம் நந்தன் (32 வயது) இவர்கள் இருவரும் முனைவாசிகள்.

இரண்டாவது தடவையாகவும் கரையில் இருந்து எதிர்[illegible] அடுத்த படையினர் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-178-199-9-5)

## கருணாநிதி கூறிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் கருணாநிதியும் மேடையேறியிருப்பது எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் கவலையையும் தருகிறது.

அன்று தொட்டு இன்றுவரை, எமது விடுதலை இயக்கம் இந்திய அரசியல் முரண்பாடுகளைத்திற் காலை வைக்காது, கட்சி சார்பற்ற நடுநிலையைப் பேணி வருகிறது. நியாயமான எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பரந்துபட்ட இந்திய வெகுசனங்களின் - குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை நாம் வேண்டி நிற்பதால் இந்த அணிசேராக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வருகிறோம்.

ஆயினும், இந்திய அரசியல் இயக்கங்கள் சில, தமது சொந்த இலாபங்களுக்காக எமது இயக்கம் மீது வீண் பழிகளைச் சுமத்தி ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி வருகின்றன. இந்த வரிசையில் இப்பொழுது கலைஞர் கருணாநிதியும் சேர்ந்து கொண்டது எமக்கு வேதனையைத் தருகிறது.

### இயக்கத்தை இழிவுபடுத்த முயற்சி

இன்று தமிழீழ மக்கள் பெரும் நெருக்கடியை சந்தித்து நிற்கிறார்கள். எமது தேசத்தின் எல்லைகளில் எதிரியின் சேனைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. யாழ். குடாநாடு மீது பெரிய தொரு படையெடுப்பை நடத்த எதிரி ஆயத்தங்களை செய்து வருகின்றான். சாவும் அழிவுமாக எதிரியின் அனர்த்தங்களால் எமது மக்கள் பெரும் துன்பப் பளுவை சுமந்து நிற்கிறார்கள்.

எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கும் பணியில் எமது விடுதலைப் போராளிகள் அளப்பரிய தியாகங்களைப் புரிந்து வருகிறார்கள்.

இந்த இக்கட்டான நேரத்தில், ஈழத் தமிழினம் பெரியதொரு இன அழிவை சந்தித்து நிற்கும் ஆபத்தான வேளையில், இங்குள்ள எமது மக்களுக்காக குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ள தமிழகத் தலைவர்கள், எமது இயக்கத்தையும் போராட்டத்தையும் இழிவுபடுத்த முயல்வது எமக்கு ஆழ்ந்த வேதனையைத் தருகிறது.

இந்த முயற்சி தமிழ் நாட்டு மக்களைக் குழப்பி, திசை திருப்பும் கபட நோக்கத்தைக் கொண்டது. தமிழீழ மக்களுக்கு இழைக்கப்படும் பெரிய தொரு அநீதியாகவே இதனை நாம் கருதுகிறோம்.

### அழிவில் அரசியல் லாபம்

இலங்கைத்தீவில் தமிழர் தாயகம் எரிந்து கொண்டிருக்கிறது. இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. எமது மக்களின் அவலத்தைப் புரியாது, அவர்களது அழிவில் அரசியல் இலாபம் தேட முயல்வது மிகவும் கேவலமான இனப்பற்றற்ற செயலாகும்.

இனியாவது, தமிழக அரசியல் வாதிகள் பொறுப்புணர்வுடன், ஒடுக்கப்படும் எமது மக்களின் உணர்வுகளை மதித்து, எமது சுதந்திர இயக்கத்திற்கு களங்கம் ஏற்படாதவாறு செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## யாழ். பல்கலைக்கழகம்

4 ஆம் வருட கலைப்பீட மாணவர்களின் Group Photo இன்று பிற்பகல் 4 மணிக்கு (08-10-93, வெள்ளி) எடுக்கப்படவுள்ளதால் அனைத்து 4 ஆம் வருட மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

இறுதிவருட மாணவர்கள்.

(27588)



## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் நாகமுத்து

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது மேலைப்புலம் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் நாகமுத்து நேற்று (7-10-93) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, இளையதம்பி, மற்றும் விசாலாட்சி ஆகியோரின் சகோதரியும், கோபாலலிங்கம், சுந்தரலிங்கம், இவலிங்கம், லோகதாசன், காலஞ்சென்ற தருமலிங்கம், தளையசிங்கம், ஞானாம்பிகை, மீனாம்பிகை, சரஸ்வதி, தவராசசிங்கம், ராசசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தருமராசா, தெய்வேந்திரராசா, ஜீவன்குமார், கருணாதேவி, தவமணி, புனிதவதி, கலாவினி, ஞானலட்சுமி, சுதாமதி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், லிங்கராஜ், சத்தியராஜ், விஜயராஜ், ஜெயராஜ், கௌரி, தேவசிங்கா, நிதிசிங்கா, நீதிசிங்கா, தேவநிதினி, குமுதினி, நந்தினி, சுவேந்தினி, கோமதி, நிமலன், சுபோதினி, யனனி, தனுசா, சதன், கிஷனுஜா, குட்டி, அங்கரன், சஜீவதனி, டக்சினி, தாட்சாயினி, தர்மினி, சிந்துஜா, சாமந்தி, சபிதா, கணேஸ், சர்மிளா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11.30 மணி அளவில் அளவெட்டி இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

வ. தளையசிங்கம் (மகன்)

மேலைப்புலம், அளவெட்டி.

(27586)



## 42 ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி சுமித்திரா செல்வராசா

(இராமநாதன் கல்லூரி மாணவி)

தோற்றம்: 24-09-1978 மறைவு: 29-08-1993

தொண்டுகள் பலபுரிந்த தூயவளே
கண்ணுக்குள் ஆடுகின்ற கண்மணியே
விண்ணுக்குள் ஒளியாகி நிற்பவளே — உன்
எண்ணத்தில் நாமெல்லாம் ஏங்குகின்றோம்

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
இராமநாதன் கல்லூரி.

(ஐ/2032)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 10 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org